**வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகம் - 2013**

-----------------------------------------------------------------------------------------------------------------------

வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 47(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு விரிவான அறிக்கையொன்று 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

--------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவினது (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக் கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2:2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதி பூச்சியமாக காணப்படும் கிரயம் ரூபா 2,874,467 ஆன சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | மோட்டார் வாகன விபத்துத்திற்குட்பட்ட காரணத்தால் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகளுக்காக ரூபா 1,732,518 தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், விபத்து இடம்பெற்று 2 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், சேதங்கள் தொடர்பான நடவடிக்கை எடுத்து பிரமாணங்களின் பிரகாரம் இறுதி அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 26/92(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை கடிதம் | அரச வாகனங்களில் அரச இலட்சினையும் மற்றும் நிறுவனத்தின் பெயரும் பொறிக்கப்பட வேண்டிய போதிலும் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தின் 06 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதிய அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சம்பளம் மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்படும் வரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் மற்றும் நிறைவேற்று பதவிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பயன்படுத்தப்படும் ஆட்சேர்ப்பு நடைமுறை 2009 ஆம் ஆண்டின் போது தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தினால் தற்காலிகமாக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்காக இருக்க வேண்டிய ஆகக்குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்திராத இரண்டு உத்தியோகத்தர்கள் அப்பதவிகளுக்கு உள்ளீர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளை பின்பற்றாத நிறுவவகத்தின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு சேவை நீடிப்பினை வழங்கி அவர்களுக்குச் சம்பளமாக ரூபா 5,148,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நிதி, திட்டமிடல் அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மோட்டார் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்திற்கு உரித்தாகாத 08 உத்தியோகத்தர்களுக்காக சலுகை மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அங்கீகரிக்கப்படாத பதவியொன்றிற்கு உரிய தகைமைகளைக் கொண்டிராத உத்தியோகத்தர் ஒருவருக்கு நிர்வாக சபையால் நியமனம் வழங்கி ரூபா 153,720 சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2011 முதல் 2013 வரையான ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,144,313 தொகையான கல்விசார் கொடுப்பனவிற்கும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,028,475 தொகையான ஆராய்ச்சி கொடுப்பனவிற்கும் உரிய அதிகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 3,123,062 மிகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,993,820 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் அதிகரிப்பு ரூபா 5,116,882 ஆக இருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 முகாமைத்துவ திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) துறைசார் விரிவுரையாளர்களை பயிற்றுவிக்கும் நிறுவகத்தின் 2013 திசெம்பர் இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேறிய செயற்பாட்டு இலாபம் ரூபா 538,528 ஆக இருந்ததுடன், அதற்கு வரிசை அமைச்சினால் மீளாய்வாண்டில் மானியமாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 3,693,886 தொகை காரணமாக இருந்தது. அத்தொகை கிடைக்கப்பெறாதிருந்தால் நிறுவகத்தின் தேறிய செயற்பாட்டு நட்டம் ரூபா 3,155,358 தொகையாக இருந்திருக்கும்.

(ஆ) வாழ்க்கைத் தொழிநுட்ப கல்வி அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் 2011 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 5,658,848 பெறுமதியான கணனி மென் பொருட்களும் வன் பொருட்களும் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் அதில் கல்வி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துகின்ற மென்பொருட்கள், மாணவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள், பரீட்சை பிரிவின் பெறுபேறுகளை வழங்குதல் ஆகிய பிரிவுகள் மாத்திரமே செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் கொள்வனவு செய்த நோக்கத்தை நிறைவேற்றாமல் கம்பனிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றான இளைஞர் சேவைகள் கம்பனிக்கு நிறுவகத்திடமிருந்த ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான டிஜிடல் பிரின்டர் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2 ஆண்டுகளுக்கு முன்னர் சேவையிலிருந்து வறிதாகிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 134,309 தொகையும் மீள ஒப்படைக்கப்படாத 05 பொருளிருப்பு பொருட்களுக்காகவும் அறவிடப்பட வேண்டிய கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.3 விளைவற்ற சொத்துக்கள்**

ரூபா 4.7 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட உப வேந்தரின் உத்தியோகபூர்வ விடுதி 2010 மே மாதத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ் பணிக்கொடை மிகை அறவீட்டுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமை தொடர்பாக மீளாய்வாண்டின் போது தொழில் ஆணையாளரிடமிருந்து கிடைத்த கட்டளையின் அடிப்படையில் நிறுவகத்தின் உத்தியோகத்தருக்கு செலுத்திய மிகை அறவீடான ரூபா 18,041 தொகை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடுவது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொறியலாளர் மதீப்பீடு தயாரித்தல், உரிய துறை தொடர்பான அறிவு அனுபவம் உள்ள தகைமையான உத்தியோகத்தர் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் மதிப்பீடுகள் முகாமைத்துவ உதவியாளரால் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசின் கொள்வனவு வழிகாட்டி கோவையின் 4.3 இன் பிரகாரம் பொலிகாபனேட் கூரையை பொருத்துவதற்காக (Fabrication and Istallation of Polycarbonate Roof) மொத்த கிரய மதிப்பீட்டை தயாரிக்கும் போது சரியாகவும் அண்மித்த வகையிலும் மதிப்பீடு தயாரிப்பதற்காக அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தன. உயர் செரிவிலான கல்வனைஸ் பெட்டி தூண்களை (High tensile galvernized box bars) வழங்குவதற்காக பொறியியலாளர் மதிப்பீட்டின் பிரகாரம் 2,475 அடி நீளத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரரின் இறுதி பட்டியலின் பிரகாரம் 1,734 அடி நீளம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 475,116 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது 741 அடி நீளம் கூடுதலாக மதிப்பிடப்பட்டிருந்ததாகவும் அது ஒப்பந்த பெறுமதியில் 30 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4.6 முறையான வகையில் கையேற்கப்பட்டிராத சொத்துக்கள்

வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 69(2)(அ) பிரிவின் பிரகாரம் வாழ்க்கைத் தொழிநுட்பக் கல்வி பல்கலைக்கழகத்தை நடாத்திச் செல்லும் காணி பல்கலைக்கழகத்திற்கு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டின் பிரகாரம் 11 செலவின விடயங்களுக்காக ரூபா 7,480,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 04 செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்படாதிருக்கையில் மீளாய்வாண்டின் போது ரூபா 5,207,613 தொகை செலவினமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. பாதீடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**5.2 பொதுப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் தீர்மானம்**

2012 ஒக்டோபர் 12 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் கல்விசார் பதவியணிக்காக செலுத்தப்பட்ட ரூபா 1,683,283 ஆன படிகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்து முகாமைத்துவம்

(ஆ) பெறவேண்டிய கணக்குகள்

(இ) பாடநெறிகள் நடாத்தல்

(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்